©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை: ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 1] சென்னை, புதன்கிழமை, ஜனவரி 7, 2009
மார்கழி 23, திருவள்ளுவர் ஆண்டு – 2039

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

#### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

*[அரசாணை (நிலை) எண் 109, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை, நாள்: 10 செப்டம்பர் 2008.]*

1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 112ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1950ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில், கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார். இதன் வரைவு, மேற்படி சட்டத்தின் 115ஆம் பிரிவில் கோரியுள்ளவாறு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

#### திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில் உள்ள,—

(i) 56–B விதியில்,

(அ) துணை விதி (1)–ல், ''சோதனை மற்றும் பாதுகாப்புப் பிரிவு'' என்ற தொடர் விட்டுவிடப்பட வேண்டும்;

(ஆ) துணை விதி (3)–ல் ''கருவூல இரசீது ஒன்றின் மூலம்'' என்ற தொடருக்குப் பதிலாக, ''கருவூல இரசீது ஒன்றின் மூலம் அல்லது நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியின் யாதொரு கிளையில், சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளரின் பெயரில் பெறப்பட்ட குறுக்குக் கோடிட்ட கேட்பு வரைவுக் காசோலை ஒன்றின் மூலம்'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்; மற்றும்

(2) படிவம் எண் 8B-ல், இனம்4–ல் உள்ள ''கருவூல செலுத்துச்சீட்டு எண் மற்றும் நாள்'' என்ற தொடருக்குப் பதிலாக, ''கருவூல செலுத்துச்சீட்டு எண் மற்றும் நாள் அல்லது கேட்பு வரைவுக் காசோலை எண், வங்கியின் பெயர், நாள்'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**ரமேஷ்குமார் கன்னா,**
*அரசு முதன்மைச் செயலர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (ப) எண் 433, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, நாள்: 21 அக்டோபர் 2008.]*

தமிழ்நாடு 1936ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1936) 26ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் விதிகளில், கீழ்க்காணும் திருத்தத்தை இதனால் செய்கிறார். அதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 26ஆம் பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவில் கோரியுள்ளவாறு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

## திருத்தம்

மேற்சொன்ன விதிகளில் 23ஆம் விதியில் உள்ள ‘‘இருநூறு ரூபாய் வரையில் நீட்டிக்கத்தக்க’’ என்ற தொடருக்குப் பதிலாக, ‘‘எழுநூற்று ஐம்பது ரூபாய்க்குக் குறையாமல், ஆனால் ஆயிரத்து ஐநூறு ரூபாய் வரையில் நீட்டிக்கத்தக்க’’ என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்**,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது